பெருமாள் கோயில்தான் பழுதடைந்திருக்கிறது. அதைப்பற்றி தான் இங்கே குறிப்பிடுகிறார் என்ற கருதுகிறேன். மேற்படி திருக்கோயிலில் பழுதடைந்துள்ள சுவரை மாற்றுவதுடன் திருப்பணி குழு அமைத்து திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மின்வாரியத்தால் விவசாயிகளின் மின் பாக்கிக்கு விதிக்கப்படும் வட்டி விகிதம்.

625—(*வினா எண்: 12012) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியத்திற்கு விவசாயிகள் கட்டவேண்டிய மின்பாக்கி தவணை தவறினால் விதிக்கப்படும் வட்டி விகிதத்தை குறைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 11.00.)

மாண்புமிகு திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவரவர்களே, இல்லை என்ற விவரத்தைச் சொன்னார்கள். விவசாயிகளுக்கு நம்முடைய அரசு நிறைய சலுகைகளைச் செய்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் இங்கே அவர்கள் கேட்காத பல சலுகைகள் எல்லாம் கூட வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த மின் கட்டணப்

1987 மே 6]

பாக்கிக்கு 24 சதவீதம் வட்டி அல்லது அபராதம் என்ற வகையில் இருக்கிறது. இது 'உசூரியஸ் லோன் ஆக்ட்'படி தவறு என்பதை பல விவசாயிகள் உணர்ந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): அதைப்போல விவசாயிகள் கட்ட வேண்டிய மின் கட்டணம் என்றாலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்கடன் என்றாலும் அவைகளுக்கு இந்த உசூரியஸ் லோன் ஆக்ட் அப்ளை ஆகும். 4 சதவீதம் முதல் 6 சதவீதத்திற்குமேல் அவைகளுக்கு வட்டி வாங்கக்கூடாது என்று கர்நாடக உயர்நீதி மன்றமும், ஆந்திரா உயர்நீதிமன்றமும், வேறு பல நீதி மன்றங்களும் சொல்லியிருக்கின்றன. பல்வேறு சலுகைகளை விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறது. அரசாங்கம் மின் கட்டண பாக்கிக்காக இந்த 24 சதவீதம் வட்டி அல்லது அபராதம் என்று இருப்பதை கருணையுடன் குறைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே இதுபற்றி மின்துறை ஆய்வு செய்ய, மின் வாரியத்திற்கு அறிவுரை வழங்கப்படும்.

குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை அமைத்தல்.

626. (*வினா எண். 13887)—திரு. கோ. பெருமாள் பிள்ளை, டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி முனையில் திருவள்ளுவர் சிலை வைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கு அருகாமையில் இருக்கும் ஒரு சிறிய பாறையின் மீது ரூ. 432 இலட்சம் செலவில் செப்புத் தகட்டினால் ஆன திருவள்ளுவர் சிலை ஒன்றினை நிறுவ அரசு